### 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் கிரிக்கெட்

# உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, பிப்.8-

19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள். திறமையும் முதிர்ச்சியும் ஒருங்கிணைந்த வெற்றியால் நாட்டுக்கு மற்றுமொரு பெருமிதத் தருணத்தை வழங்கியுள்ளனர்.**

**இறுதிப் போட்டியிலும், இந்தத் தொடர் முழுவதும் வைபவ் சூர்யவம்சி வெளிப்படுத்திய அபாரமான ஆட்டம் இன்னும் பல ஆண்டுகளுக்கு நினைவுகூரப்படும்.**

**அடுத்து இந்திய ஆடவர் அணிக்காக உலக அரங்கில் ஆடவுள்ள இந்த இளம் பட்டாளத்தின் நம்பிக்கை மேலும் பல வெற்றிகளாக மாறிட வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



கழகப் பொருளாளரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் நேற்று முன்தினம் (06.02.2026) தமிழ்நாடு காங்கிரஸ் பிரமுகர் சி.கே.பெருமாள் அவர்களின் துணைவியார் திருமதி கே.பி.மல்லிகா பெருமாள் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைந்ததையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி சி.கே. பெருமாள் அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார்.

### திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில்

# “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, பிப். 8-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில், “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கழக அயலக அணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி சிறப்புரையாற்றுகிறார்.

10.02.2026 செவ்வாய்க் கிழமை மாலை சரியாக 5.00மணிக்கு திருவண்ணாமலை, திருவள்ளுவர் சிலை அருகில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில், “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பரப்புரைக்கூட்டத்திற்கு மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், பகுதி கழக பொறுப்பாளர்கள் சு.விஜி(எ)விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்திந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பரப்புரைக் கூட்டத்தில் கழக அயலக அணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

பரப்புரைக் கூட்டத்தில் -சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன். முத்து, சட்ட மன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ. சு.தி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தரராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி. பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், இரா.ஜோதி, என்.மாசிலாமணி, இரா. அன்பரசு, கற்பகம்சரவணன், தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, டி.கென்னடி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாநகரச் செய லாளர் ப.கார்த்திவேல் மாறன் நன்றி கூறுகிறார்.

முன்னதாக மாவட்ட தி.மு.க. அம்பேத்கர் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### தமிழின் தனித் தன்மையைப் பேணிக் காத்திட

# தனித் தமிழறிஞர் பாவாணர் வாழ்க!

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாளில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப்.8-**



**மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாள் நேற்று! அதனை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில் “தமிழின் தனித் தன்மையைப் பேணிப் பாதுகாத்திட்ட தனித் தமிழறிஞர் பாவாணர் வாழ்க!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலை தளப் பதிவு வருமாறு :-

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாள்

“தனித்தமிழ்க்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன்” எனத் தம் தமிழ்ப்பணியை மதிப்பிட்டார் பாவாணர்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தம் வாழ்நாள் கடமையாக எண்ணி உழைத்தார்.

இந்திய மொழிகளிலேயே வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பாகத் தமிழின் தனித்தன்மையைப் பேணிக் காத்திட்ட தனித்தமிழறிஞர் பாவாணர் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மாநில வாரியாக

# சாலை இணைப்பு இல்லாத கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, பிப். 8 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா (PMGSY) திட்டத்தின் கீழ் நாட்டின் கிராமங்களுக்கு அனைத்து வானிலையிலும் பயன்படுத்தக்கூடிய சாலை இணைப்பை வழங்க ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாநில வாரியாக (தமிழ்நாடு உட்பட) சாலை இணைப்பு இல்லாத கிராமங்களின் தற்போதைய எண்ணிக்கை எவ்வளவு?


இந்த இடைவெளிகளை சரிசெய்ய ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடு என்ன?

கடந்த 3 முதல் 5 ஆண்டுகளில் PMGSY திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி மாநில வாரியாக எவ்வளவு? குறிப்பாக தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மற்றும் ஆரணி மக்களவைத் தொகுதிகளில் அனுமதிக்கப்பட்ட பணிகள், செலவிடப்பட்ட தொகை மற்றும் நிறைவு நிலை என்ன?

PMGSY சாலைகளின் தரம் மற்றும் நீடித்துழைப்பை உறுதி செய்ய எந்த கண்காணிப்பு மற்றும் தரச் சோதனை முறைகள் பின்பற்றப்படுகின்றன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

# சங்கமிக்கும் சிங்கநாதம்!



பின்தொடர
இருப்பதும்

ஏழாம் முறை
கழகத்தின்
ஆட்சியே
என்பதால்

அதற்கு
பிப்ரவரி ஏழில்

முன்னோட்டம்
பார்த்து
முகூர்த்தம்
குறித்திட

தென்மண்டல
இளைஞரணி
மாநாடு

வித்தக
பூகோளமான
விருதுநகர்
சீமையில்...

ஆம்...

அரசியலில் தி.மு.க.வின்
இளைஞர்சக்தி எவ்வளவு
வலிமையானது என்பதை

உலகுக்கு உணர்த்திய
அதே
விருதுநகரில்

பெரியாரின்
பேரிகை
ஒலி கேட்டு

கலைஞர் எனும்
பொற்காலத்திடம்

முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின் எனும்
போர்க்களத்திடம்
கற்றுத் தேர்ந்திருக்கும்

எங்கள்
கழகத்தின்
கரிகாற்சோழன்

ஒப்பில்லா பேரிளைஞர்
உதயநிதி ஸ்டாலினின்
படை நடத்தலில்

இருநூறை
வெல்ல

“நாளைத்
திருநாடும்
நம்மதடா”
என்னும்
எதிர்காலம்
சொல்ல

பொங்கு தமிழ்
இளைஞர் படை

புறநானூற்று
பூமியில்
சங்கமித்து

சங்கநாதம்
இசைக்கட்டும்

புதுச் சரித்திரம்
உதிக்கட்டும்..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு
துணைத்தலைவர்

### சென்னைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் துணைவேந்தர் சே.சாதிக் அறக்கட்டளை சார்பில்

# பேராசிரியர் மா.செல்வராசன் சிறப்புரையாற்றுகிறார்!

## புரட்சிக் கவிஞர் என்னும் தலைப்பில் ஆய்வுரை!

சென்னை, பிப். 8-

இந்தியாவின் மூத்த பல்கலைக் கழகங்கள் மூன்றனுள் முதன்மையான சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி இயக்குநராகவும் திறம்படப் பணியாற்றிய சிறப்புக்கு உரியவர் பேராசிரியர் சே.சாதிக் அவர்கள். இவர் ‘பேராசிரியர் சே. சாதிக் அறக்கட்டளை, என்னும் பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவியுள்ளார். அதற்காகத் தம் சொந்தப் பணம் ஐந்து இலட்சம் உரூபாவை பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆண்டுதோறும் பேராசிரியர் சே சாதிக் அறக்கட்டளைச் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பற்றிச் சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்று உறுதியுரை எழுதியுள்ளார்.

அவர் விழைவிற்கு ஏற்ப இந்த ஆண்டு அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவைச் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர், சென்னைப் பல்கலைக் கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா. செல்வராசன் ‘புரட்சிக் கவிஞர்’ என்னும் தலைப்பில் - ஆய்வுரை வழங்குகின்றார். இவர் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்னும் பொருள் குறித்துப் பேராசிரியர் மு.வரதராசனார் மேற்பார்வையில் ஆய்வு நிகழ்த்தி 1974 ஆம் ஆண்டு பிஎச்.டி என்னும் முனைவர் பட்டம் பெற்றவர்.இதுவே பாரதிதாசன் பற்றிய முதல் முனைவர்(டாக்டர்) பட்ட ஆய்வு என்பது குறிக்கத்தக்கது!

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறை நடத்தும் இந்த அறக்கட்டளை நிகழ்ச்சி சென்னைப் பல்கலைக்கழக மெரீனா வளாகப் பவளவிழாக் கலையரங்கில் 10.02.2026 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறுகின்றது.

ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டு ஆய்வுச்சாறு அருந்தலாம் என்று சென்னைப் பல்கலைக்கழகம் அழைக்கின்றது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:

# கழக இலக்கிய அணிக் கூட்டம்!

## அணி செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் பிறந்தநாள் விழாவை ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் கொண்டாடுவது தொடர்பாகவும், வருகின்ற மார்ச் மாதம் திருச்சியில் நடைபெற இருக்கின்ற கழக மாநாட்டில் இலக்கிய அணியின் பங்கு பற்றியும், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் இலக்கிய அணியின் பணிகள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் கலந்து ஆலோசிப்பதற்காக அவசர அவசிய ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 15.02.2026 அன்று மாலை 3.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. அதில் அவசியம் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
இலக்கிய அணி தி.மு.க.